விலை: ரூபா. 2/-
(நன்கொடை)

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 1-57 ...
கொழும்பு

# இந்து கலா சாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்: திரு. ஆர். வைத்திமாநிதி

மலர்: 1 ★ திருவள்ளுவர் ஆண்டு 2919 மார்கழித் திங்கள் 1 ஆம் நாள் (1.1.1989) ★ இதழ்: 5

# இந்து மதம் சரித்திர ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டது

## மதமாற்றத்தை இளைஞர்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும்

**[ "காங்கிரஸ்" ஆங்கில சஞ்சிகை வெளியிடும் தகவல்கள் ]**

மலையகத்தில் இன்று நடந்து கொண்டிருக்கும் மதமாற்ற கெடுபிடியை விளக்கி "மலையகத்தில் இந்துக்களின் அவலநிலை" என்ற தலைப்பில் அன்பர் திரு. தேவராஜ் எழுதிய கட்டுரையை சென்ற இதழில் முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தோம்.

மலையகத்தில் மதமாற்றம் எந்த அளவுக்கு உக்கிரமடைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு நமக்கு கிடைத்திருக்கும் ஏராளமான கடிதங்கள் சாட்சியங் கூறுவதாய் இருக்கின்றன. பல ஆசிரியர்கள், தொழிற் சங்க வாதிகள் நேரில் வந்து இந்த மதமாற்ற நடவடிக்கைகளுக்கு உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். இந்து கலாசாரம் மேற்கொண்டிருக்கும் இந்த அரிய பணியைப் பாராட்டவும் செய்கின்றனர்.

மலையகத்தில் தான் இந்துக்களின் நிலை இதுவென்றால் இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடந்து கொண்டிருக்கும் மதமாற்றம் மிக "பயங்கரமாய்" இருக்கிறது. இந்த மதமாற்ற விவரங்களை கொழும்பில் இருந்து வெளிவரும் "CONGRESS NEWS" என்ற ஆங்கில சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது. அதன் சுருக்கத்தை கீழே தருகிறோம்:-

தமிழ்ப் பகுதிகளில் உள்ள தற்பாதுகாப்பற்ற இடம் பெயர்ந்த அகதிகளுக்கு சாப்பாடு மற்றும் இது போன்ற இன்னோரன்ன தேவைகளைக் கொடுப்பதை ஆயுதமாகப் பாவித்துக் கிறிஸ்தவ மதமாற்றம் நடப்பது பற்றி "காங்கிரஸ் செய்திகள்" பத்திரிகைக்கு சமீப காலத்தில் பல கடிதங்களும், அறிக்கைகளும் கட்டுரைகளும் கிடைத்திருக்கின்றன.

அமைதியான முறையில் ஏற்றுக்கொள்ளும் வகையில் இம்மதமாற்ற நிகழ்வு நடப்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. கத்தி முனையில் (அன்று) மிரட்டுவது போல கட்டாயத்தின் பேரில் அல்லது மக்களை மயக்குவது போல ஏமாற்றுவது போல பட்டினியினால் வாடும் அகதிகளின் முன் உணவுப் பண்டங்களைத் தொங்க விட்டுக் காட்டி (இன்று) மத மாற்றம் நடப்பது வருந்தத்தக்கது.

### சுயநலத்துக்காகத் தூண்டுதல்

"இந்து" மதம் மிகவும் பழைமை வாய்ந்தது. அது

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# நமது நோக்கு

## இந்து இளைஞர்களே எழுவீர்!

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற உண்மை உணரப் படல் வேண்டும். இதற்கு விரைவில் கொழும்பில் கூட இருக்கின்ற இந்து இளைஞர் மகாநாடு வழி சமைத்துக் கொடுக்க வேண்டும்.

1983 கலவரத்தின் பின் தமிழ் மக்களில் குறிப்பாக இந்துக்களின் சமய, கலை, கலாசார அம்சங்கள் அனைத்துமே தேக்கமடைந்துள்ளன. இவை அனைவற்றுக்கும் புத்துயிர் கொடுக்கும் பணி எம் முன் நிற்கின்றது.

நாட்டின் பல பாகங்களிலும் இந்துக் கோவில்கள் பல சிரழிந்துள்ளன. பல கோவில்கள் நித்திய பூஜைகளின்றி மூடிக் கிடக்கின்றன. இவை சிர் செய்யப் படல் வேண்டும்.

மலையகத்தில் தலை தூக்கி உள்ள மத மாற்றம் நிறுத்தப்படல் வேண்டும். அவற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். இந்து மத உண்மைகளை மக்களுக்கு உணர்த்தும் வகையில் பிரசாரங்கள் மேற் கொள்ளப் பட வேண்டும்.

பாடசாலைகளில் அருகி வரும் இந்து மத போதனைகளுக்குப் புத்துயிர் கொடுக்கப்படல் வேண்டும். சமயம் போதிப்பது கட்டாய பாடமாக இருந்த போதும் பல பாடசாலைகளில் குறிப்பாக மலையகத்தின் பல பகுதிகளில் புற்று நோயாக வளர்ந்து கொண்டு வரும் இந் நிலை களைந் தெறியப்பட ஆவன செய்ய வேண்டும். இதற்கான வழிவகைகளை நாம் விரைவில் கண்டாக வேண்டும்.

இந்துக்களுக்கென கலாசார மண்டபம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வேண்டும். புலமைப் பரிசில்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பல பணிகள் எம் முன் காத்துக் கிடப்பதைக் கடந்த மாத இதழில் திரு. தேவராஜ் சுட்டிக் காட்டினார்.

இவை அனைத்துமேஎமது நாளைய சந்ததியினருக்காக நாம் செய்ய வேண்டிய கடமையாகும். இவற்றை நாம் செய்யத் தவறின் நாளைய சந்ததியினரின் ஏளனத்திற்கும், பழிச் சொல்லுக்கும் ஆளாகும் அதே வேளையில் பின்னடைந்து தேக்கமடைந்துவிட்ட எமது இந்து தர்ம நடவடிக்கைகள் இன்னும் பல வருடங்கள் பின்னடையக் காரணமாக இருந்தவர்கள் என்ற அவச் சொல்லுக்கும் உரியவராகும் நிலை ஏற்படும்.

இதற்கு இன்று தேவைப்படுவது ஒருங்கிணைந்த ஒற்றுமைப்பட்ட அமைப்பாகும். அவ்வாறான அமைப்பின் மூலமே காத்திரமாக எமது பணியினை முன்னெடுத்துச் செல்ல முடியும். இவை அனைவற்றுக்கும் விரைவில் நடக்க இருக்கின்ற இந்து இளைஞர் மகாநாடு வழி சமைத்துக் கொடுப்பதாக அமைய வேண்டும்.

ஒரு இக்கட்டான நிலையில் நெருக்கடி மிகு காலகட்டத்தில் கூட இருக்கின்ற இந்து இளைஞர் மகாநாடு இலங்கை வாழ் இந்து மக்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துவதாக, சரித்திர முக்கியத்துவமுடையதாக, அமைய வேண்டும். இதற்கு சகலரும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

# அன்பே சிவம்

உணர்ச்சிகள் ஒன்பது, திசைகள் எட்டு, இசை ஏழு சுவை ஆறு, புலன் ஐந்து, படை நான்கு, தமிழ்மூன்று பால் இரண்டு என்று வகுத்திருந்த தமிழ் கூறும் நல்லுலகம் இறைவனை மட்டும் ஒன்றாகவே கண்டு விளங்கியது.

இருப்பதை இருப்பதாக உணர்த்துபவனாகவும் அதிலிருப்பதை வெளிப்படையாகப் புலப்படுத்தாமலும் ஒன்றாயும், இரண்டாயும் நின்று அருள்பாலிப்பவனே இறைவன். 'பூவினுள் நாற்றம் நீ. தீயினுள் தெறலும் நீ' என்று பரிபாடல் உணர்த்தும் தன்மையான இறைவன் இத்தகையன், இந்நிறத்தான் இவ்வண்ணத்தான் இவன் தான் இறைவன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாத தன்மையன். ஆனால் இது அவன் செயலே என்று அவன் இருப்பதை உறுதியாகக் கூறப்படக் காடியிலன்.

எங்கும் நிறைந்து எல்லாமாகி நிற்கும்பரம் பொருளை பூச்சியத்துக்கு ஒப்பிடலாம். பூச்சியம் இல்லாமல் ஏனைய எண்களின் மதிப்பு பெருக்கமடையாது தனக்கென ஒரு தனி மதிப்பு ஏதும் இல்லாது பூச்சியம் இருப்பதைப் போலவே இறைவனும் தனக்கென்று உருவம், குணம், பயன் ஏதுமின்றி இருப்பான். ஆனால் ஏனைய உயிர்களுக்கு உருவமும், பலமும், குணமும் வழங்கி நிற்கிறான்.

இறையருள் எங்கும் வியாபித்திருந்தாலும் கூட பள்ளத்தை நாடி நீர் செல்லுவது போல தாகமுள்ளவன் தண்ணீரைத் தேடிச் செல்லுவதே முறையென்பதற்கு ஏற்ப இறைவனின் அருளைநாடுபவர்களை இறையருள் நாடி வருகிறது. அவனது அருள் வெள்ளத்தில் மூழ்கி ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்காக நமக்கு முன்னே தோன்றியுள்ள நாயன்மார்கள், ஆழ்வவார்களுமற்ற மகான்களும் காட்டிச் சென்றுள்ள வழிகள் பலப்பல.

அப்படி அவனை அடைவதற்குரிய வழிகள் பலவாக இருப்பினும் அவற்றின் அடிப்படை அன்பென்ற அரிய சக்தியேயாகும். இறைவன் அன்பு வடிவானவன், அன்பை நாடுபவன். அன்பினால் தடையப்படுபவன். அன்பே சிவம் என்பது இதைத்தான்உணர்த்தி நிற்கிறது. இத்தகைய அரிய சக்தியான அன்பு ஏனைய அனைத்து உணர்ச்சிகளையும் தன்வசப்படுத்தி ஆளக்கூடிய தன்மையது.

அன்பென்பது ஆத்மார்த்தமான மொழியாகும். உலக உயிர்கள் அனைத்துயிரும் பொதுவான நியதி. எங்கும் விரும்பி வரவேற்கப்படும் உபச்சாரம்.

(12ம் பக்கம் பார்க்க)

## ● சிறுவர் பகுதி

# பாலவிகாஸ்

அன்புத் தம்பி தங்கைகளே!

பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் 63 வது பிறந்த நாள் விழா இலங்கையிலுள்ள எல்லா சாயி நிலையங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அக்காவுக்கு பெரு மகிழ்ச்சியாய் இருக்கிறது.

கொட்டாஞ்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் கொழும்பு சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தினர் ஓர் அகண்ட நாம விஷேச பஜனையை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த அகண்ட நாம பஜனையில் மத்ய நிலைய பாலவிகாஷ் தம்பி தங்கைகள் பகவானின் வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டுவது போல் பேச்சு, சம்பாஷணைகள், பாடல்கள் மூலம் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். நிகழ்ச்சி மிக அருமையாக இருந்ததையும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தம்பி தங்கைகளின் திறமையையும் பாராட்டுகிறேன்.

உங்கள் அன்பு அக்கா
**அமரா**

## கைவண்ணம்

—சாலை இளந்திரையன்—

காடு வெட்டி நிலந்தி ருத்திக்
கழனி செய்தார்?—அக்
கழனி தோறும் கரும்பு செந்நெல்
குடிய மைத்தார்?
வீடு கட்டி நகரம் ஊர்கள்
விரிவு செய்ததார்?—அவ்
விரிவு தோறும் கலையின் மாண்பு
விளங்க வைத்தார்?

கடலில் ஏறி உலவி மீளப்
படகு தந்ததார்?—அப்
படகு தன்னை வளர்த்துக் கப்பல்
எனவி டுத்தார்?
உடலில் ஊறும் வியர்வை தள்ள
விசிறி நிற்பதார்?—அவ்
விசிறி தன்னை முகட்டில் ஏற்றிச்
சுழல விட்டதார்?

காரி யங்கள் கவினி லங்கள்
கரங்கள் தந்தன;—அக்
கரங்க ளில்லை எனினுஞ் ஞாலம்
உறங்கிப் போய்விடும்!
ஒரி ரண்டு தளிர்கள் மீதில்
உலகம் நிற்குது!—அவ்
உலக மாண்பின் வளர்வு முற்றும்
தளிரில் நிற்குது!

நன்றி: மில்க்வைட் செய்தி

## சுற்றுடற் கல்வி

கல்வியின் நோக்கம்; மாணுக்கன் பிற்காலத்தில் சூழலைத் தன்வயமாக்கித் தமது வாழ்க்கையை நடத்தவும், சமூகத்தோடு சேர்ந்து வாழப் பழகவும், நாட்டின் மூல வளங்களைப் பயன்படுத்திச் சேவையாற்றவும் பெரும்பாலும் வழி வகுச்சு கூடியதாக அமைய வேண்டும். அப்படி மாணவனை, மையமாகக் கொண்டு கல்வி அமைந்தால் கல்வியினுல் எதிர்பார்க்கும் பயன் முழுவதாகக் கிடைக்கக் கூடியதாக விருக்கும். ஆரம்ப வகுப்புகளில் கற்கின்ற மாணுக்கன் 5 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளில் சமூகக் கல்வி, விஞ்ஞானம் முதலான பல பாடங்களைக் கற்பதற்கும் சுற்றுடற் கல்வி நுழைவாயிலாக அமைந்துள்ளது. மாணுக்கன் தான் வசிக்கும் சுற்றுப்புறத்தையும், அயலையும் அவதானித்து ஆராய்ந்து செய்து பார்த்து, அறிவு பெறுவதற்குச் சுற்றுடற் கல்வி உதவுகின்றது எனலாம்.

மனிதன் தனது சுற்றுடலை மாற்றியமைக்கவும், சூழலுக் கேற்ப மாறவும் மேற் கொள்ளுகின்ற நிரந்தரமான முயற்சிகளினுல் பண்பாடு, கலாசாரம், முதலானவற்றில் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்று கூறலாம். அதற்காக, மாணுக்கன் தனது சுற்றுடலைப் பற்றிய தெளிவான விளக்கம் பெறுவது போலச் சுற்றுடல் காலத்துக்குக், காலம், இடத்துக்கிடம், மாற்றமடைகின்ற தன்மைகளையும் உணர்ந்தால் சிறப்பான வாழ்வு வாழமுடியும். அவ்வச் சூழலிலுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்களினுலும், பௌதிக சமூக ஆயல்புகளினுலும் உண்டாகியுள்ள சூழற்சார்பான கிடைத்த தாக்கங்களை அறிதல், உற்று நோக்கி அவதானித்தல், பரிசோதனைகள், புத்தகங்கள் வாசித்தறிதல், கண்டு பிடிப்புமுறைகளை மேற் கொள்ளுதல் முதலான தொழிற்பாடுகளின் மூலமாக மாணுக்கர் சுற்றுடலிற் கல்வியைக் கற்க முடிகின்றது.

(தொடரும்)

## கிரியைகள்

கிரியைகள், கோயில் கிரியைகள், இல்லக் கிரியைகள் என இருவகைப் படுகின்றன. கோயில் கிரியைகள் நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் என மூன்று வகைப்படும். இல்லக் கிரியைகள் பல வகையுண்டு. அவை குழந்தை, ஒன்று கருவில் அமையத் தொடங்கி அது பிறந்து வளர்ந்து இறக்கும் வரையும், இறந்த பின்பும் பல கிரியைகளைச் செய்கின்றனர்.

வேதங்களோடு இணைந்த சூத்திர துணைப் பகுதிகள் மூன்று. அவை சிரௌத சூத்திரங்கள், கிருஹ்ய சூத்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# தர்மத்தைப் போதனை செய்ய வேண்டும்

—கவிஞர் சி. அழகுப்பிள்ளை—

இந்துக்கள் சமயத்தை இலேசு லேசாய்
இழிந்திடச் செய்கின்றார் மலையகத்தில்,
சிந்திக்குந் திறனில்லாத் தொழிற்குலத்தார்,
சிறிதேனும் சைவநெறி அறிவிலாதார்,
வந்தங்கு வசமாக்கும் போதகர்கள்,
வஞ்சநிறை வார்த்தையில் மயங்கியவர்,
முந்தையர் பூசித்தத் தெய்வப் படம்,
முழுவதும் மூலையில் மூடிவைப்பார்.

செவியாரத் தேவாரம் பாடுகின்றச்
சிறார்களைப் பெற்றோரின் செயலதனால்,
தவிக்கின்றார் தஞ்சமயந் தகர்தல் கண்டு.
தடைசெய்ய இயலாமல், பெற்றோர்வழி
கவிழ்க்கின்றார் உள்ளத்தைப் புறச்சமயக்
கற்பனையில் ஆழ்கின்றார் கதிவேறின்றி,
அவிகின்றார் இளையதலை முறையினர்கள்.
அறியாமைச் சேற்றினில் அமிழ்கின்றாரே!

மலைநாட்டை மருவிய நகர்ப்புறத்தின்
மயமான ஆலயம் பரிபாலிப்போர்,
கலையாகப் பலலட்சம் நிதிதிரட்டி,
சோபிக்க விழாப்பல செய்யுகின்றார்,
கலைக்கோலங் காணுகின்றார் திருவிழாவில்,
கணக்கற்ற பொருட்செல்வம் புரிகின்றார்,
தலையாய தமிழ்ச்சமயம் வளர்ச்சிபெறத்
தக்கதோர் குருகுலம் அமைத்தாலென்ன?

வகுப்புக்கள் சமயத்தைப் போதித்திட,
வாரத்தில் ஒரு நாளில் தோட்டந் தோறும்,
தகுதியுளக் குரவர்கள் இந்துமதத்
தர்மத்தைப் போதனை செய்யவேண்டும்.
வகுத்திதை நகர்ப்புற ஆலயங்கள்,
வரையாது வழங்கிவழி நடத்தவேண்டும்.
புகுந்தின்று மத மாற்றும் போதகர்கள்,
புகலுரைக்கு மறுப்புரை புடைக்க வேண்டும்.

---

(3ம் பக்க தொடர்ச்சி)

**கிரியை...........**

திரங்கள், தர்ம சூத்திரங்கள்என்பனவாகும் கிரௌத சூத்திரங்கள் வேதவேள்விகளையும், கிருகிய சூத்திரங்கள் இல்லக்கிரியைகளையும், தர்ம சூத்திரங்கள் வாழ்க்கை ஒழுக்கங்களையும் விளக்குகின்றன.

கிரௌத சூத்திரங்களில் உள்ள வேள்விக் கிரியைகள் ஆகமங்களில் உள்ள கிரியைகளுடன் இணைந்து இன்று கோயில் கிரியைகளாக மாற்றமடைந்து விட்டன. இச்சூத்திரத்தின் விளக்கங்களும் விதி முறைகளும் பக்தியுடன் இணைந்து கோயில் பூசை முறைகளுக்குப் பயன்படுகின்றன. இதனால்தான் ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியைகள் வேத சிவாகம முறைப்படி நடைபெறுகின்றது என்கின்றனர். ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் ஆன்மாக்களின் பொருட்டு சிவாச்சாரியார்களால் செய்யப்படுபவை. இவை பராத்தமானவை.

கிருகிய சூத்திரங்கள் இல்லங்களில் நடைபெறுகின்ற மனித பிறப்பு முதல் இறப்பு வரையுள்ளதும் அதன் பின்னும் செய்யப்படுகின்ற சடங்குகளை விளக்குகின்றன. இவை குடும்ப சுகத்தையும் இறந்தவர்களது சாந்தியையும் குறிப்பாகக் கொண்டு செய்யப்படும். அதேவேளை சமய கடைப் பிடிப்புக்களையும் இணைத்து நடாத்தப்படுகின்றன. இவை ஆத்மார்த்தமானவை. இல்லக் கிரியைகளில் வேத கால பிராமணர்களுக்காக வகுக்கப்பட்ட கிருகிய சூத்திரத்தை பயன்படுத்துகின்றன. இவ்வீட்டுக் கிரியைகளில் சில, சீமந்தம் போன்றவை இக்காலத்தில் கைவிடப்பட்ட அதே வேளை திருமணக் கிரியைகளும் அபரக்கிரியைகளும் தவறாது நடைபெறுகின்றன.

இன்று மக்களால் செய்யப்படும் இக்கிரியைகள், இன்றைய விஞ்ஞான உலகத்தில் எமக்கு வீண் போல் தெரிந்தாலும் அவை, மிக ஆழமான தத்துவங்களையும் கருத்துக்களையும் கொண்டவை. இக்கிரியைகளின் தத்துவங்களையும் கருத்துக்களையும் இன்றைய இந்து சமுதாயத்திற்கு விளக்க வேண்டியது இந்துக்களாகிய எமது கடமையே. இவற்றை நாம் செய்யத் தவறுகின்ற பட்சத்தில் படிப்படியாக எமது இந்து மதத்தில் உள்ள கிரியை முறைகளும் தத்துவங்களும் மழுங்கடிக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிடும்.

— நா. சி. பாலேந்திரன்

---

### விவேகானந்தரின் அறிவுரை

(1) நீ எதைநினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால், வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற, போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள்.

(3) பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்

(4) நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான்.

(5) மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

தொகுப்பு:—

செல்வி வளர்மதி முத்துசாமி

---

**மனம் மிகவும் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையான மனம் இருந்தால்தான் முகம் புத்துணர்ச்சியுடன் விளங்கும்.**

---

# காலத்தின் தேவை கருதி

# பணிபுரியும் வி. ரி. வி.

சமூக, கலை, கலாசார சமயப்பணிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டவர் வி. ரி. வி. தெய்வநாயகம் பிள்ளை. அவர் தனது பணிகள் மூலம் அரசியல், இன, மத வேறுபாடுகளையும் கடந்த நிலையில் பலரின் அன்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராக இன்று இருக்கின்றார். அடக்கமான அமைதியான அவரின் சேவையை உணர்ந்து மதித்து இந்து கலாசார அமைச்சு கௌரவித்துப் பாராட்டி உள்ளது. இன்று அவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் நியமிக்கப் பட்டுள்ளார். நவம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை கொழும்பு மாவட்டப் பதில் நீதிபதி திருமதி ஏக்கநாயகா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

**வி. டி. ராஜ்**

ஜயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தாவாகவும், பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலய தர்ம கர்த்தாக்களில் ஒருவராகவும், வல்லநாடு ஸ்ரீ விநாயகர் ஆலய தர்ம கர்த்தாவாகவும் இருந்து தொண்டு புரிந்து வருகின்றார்.

கோவில்கள் அன்பு, தூய்மை, இறை வழிபாடு போன்றவற்றை நெறிப்படுத்தும் இடங்களாக மாத்திரம் இயங்குவதில்லை. ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் சமூக, கலை, கலாசார அம்சங்களை வளர்த்தெடுக்கும் மையமாகவும் அவை விளங்குகின்றன. கடந்த கால வரலாறு இதனை எமக்குத் தெளிவுபடுத்தி உள்ளன.

வரலாற்றில் நிலவிய நெருக்கடியான கால கட்டத்தில் கூட கோவில்கள் இப் பணிகளைக் கொண்டு நடத்துவதில் பின் நிற்கவில்லை.



பெரியார் தெய்வநாயகம் பிள்ளை

அவ்வகையில் 1983 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட இலங்கையின் நிலைமைபற்றி யாவரும் அறிந்ததே. இவ்வாறான ஒரு நெருக்கடி நிலை நிலவுகின்ற இக் காலகட்டத்தில் தமிழ் மக்களின், கலை, கலாசாரம், சமயம் போன்றவற்றிற்குச் சவால் விடுக்கப்பட்டுள்ள இவ்வேளையில் கோவில்களினதும் அதன் அறக் காவலர்களினதும் பணி மிக முக்கியத்துவமுடையதாகும்.

இந்த அவசியத் தேவையை உணர்ந்தவராக, வி. ரி. வீ. உள்ளார். காலத்தின் தேவை உணர்ந்து அவர் ஆற்றும் பணிகள் பெறுமதி மிக்கவை. 77 வயது இளைஞனாக நின்று அவர் செய்யும் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

நீங்கள் படித்துவிட்டீர்களா?

**தேசபக்தன் கோ. நடேசய்யர்**

மலையக மக்கள் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்துக்கு வித்திட்டவர் தேசபக்தன்

**கோ. நடேசய்யர்**

இந்த வரலாற்று ஆய்வு நூலை ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான சாரல் நாடன் எழுதியுள்ளார்.

மலையக கலை இலக்கிய பேரவையினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு ஆய்வாளரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூபா. 75/-

விபரங்களுக்கு:—

**மலையக கலை இலக்கிய பேரவை**
57, மகிந்த பிளேஸ்,
கொழும்பு—6.

## காஞ்சி புதுப்பெரியாள்வார் அருளுரை

# துக்கம் வராத வாழ்வு

''உலகத்தில்இருக்கும் பிராணிகளுக்குள் மனித வாழ்க்கை—மனித ஜன்மா—மிகவும் உயர்ந்தது''.

எல்லாப் பிராணிகளுக்கும் வாய் இருந்தால் கூட அது ஆகாரம் சாப்பிடவும் சப்தம் போடுவதற்கும் மட்டுந்தான் இருக்கிறது, மனிதன் ஒருவனுக்கு மட்டுந்தான் இந்த வாய் பகவந்நாமா சொல்வதற்கும் சேர்ந்து உபயோகப் படுகிறது. அதனால் பகவானுடைய அனுக்ரஹத்தை அடைந்து நல்ல கதியை — நல்ல நிலையை — அடைவதற்கு மனித ஜன்மா ஒன்றுக்குத் தான் நல்ல வாய்ப்பு இருக்கிறது.

இந்த மனித வாழ்க்கைக்குத்தான் சட்டை போட்டுக் கொள்கிறோம். குளிக்கிறோம், சாப்பிடுகிறோம், தூங்குகிறோம், உத்தியோகம் செய்கிறோம். மனோ வாழ்க்கைக்கும் அவை தொடர்ந்து வருவதனால் மிகவும் அனுகூலமாக இருக்கும்.

ஸ்நானம் செய்யும்போது கங்கையை நினைத்துக் கொள்ள வேண்டும். உடம்புக்காக ஸ்நானம் செய்தாலும் கங்கையை நினைக்கும்போது அந்த நினைவு உள்ளுக்குள்ளே செல்லும். அதேபோலச் சாப்பிடுவது உடம்புக்காக; இருந்தாலும் கூட அப்போது, 'கோவிந்த கோவிந்த' என்று சொல்லிக் கொண்டு சாப்பிடுவ

( 6ம் பக்கம் பார்க்க)

(5ம் பக்க தொடர்ச்சி)

தன் மூலமாக அந்த நினைவு ரத்தத்தினுள்ளே செல்லும். இவை மனோ வாழ்க்கையை நல்லபடியாக அமைக்கும்.

இது மாதிரி எந்த ஒரு காரியம் உடம்புக்காகச் செய்தாலுங்கூட அந்தக் காரியம் எல்லாம் மானசிக வாழ்க்கைக்குத் தொடர்பு உள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும் என்று தான் பக்தி வழி — தர்ம வழி — சொல்லியிருக்கிறது

அந்த மாதிரி வழியில் தாம் எல்லோரும் இருந்து கொண்டு நம்முடைய வாழ்க்கையைஅமைத்துக்கொண்டோமானால் — இரண்டு வாழ்க்கையையும் ஒரே வாழ்க்கையாகச் செய்து கொண்டோமானால் பௌதிக வாழ்க்கை — உடல் வாழ்க்கையை உள்ளத்துவாழ்க்கையாக, மனோ வாழ்க்கையாக அமைத்துக் கொண்டோமானால் —நமக்குத் தேசத்தில் எந்த விதமான கஷ்டமோ, சிரமமோ ஆபத்தோ, துக்கமோ எதுவும் வராது. அதுபோல ஒவ்வொருவரும்தம்முடைய வாழ்க்கையைப் பழக்கம் செய்து கொள்ள வேண்டும்

இதற்காகத்தான் கங்கா ஸ்நானம் செய்வது, க்ஷேத்ராடனம் செய்வது, தீர்த்தங்கள் செய்வது, கோவில்கள் செல்வது, ஸத்சங்கத்தில் சேருவது எல்லாம் வைத்திருக்கிறோம், இது போல எல்லா ஜனங்களும் —இதுவரை எப்படி இருந்து வந்தார்களோ, அதே போல் மேலும் மேலும் நல்ல காரியங்களில் ஈடுபட்டு அகவாழ்க்கை புற வாழ்க்கை இரண்டும் இரண்டற ஒன்றாகக் கலந்து ஆனந்தமாக இருந்து தம்முடைய வாழ்க்கையில் சுகத்தையும் சாந்தியையும் அடைவார்களாக!

## பாவத்தைப் போக்கும் நாமம் !

**‘சிவ’ என்பதற்குப் பரம மங்களம் என்பது அர்த்தம்**

பரமேசுவரனுடைய நாமமாகிய ‘சிவ’ என்பது வேதத்தின் மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. பாவத்தை ஒரே க்ஷணத்தில் துவம்ஸம் பண்ணும் ஒரு வஸ்து உண்டு. அந்த வஸ்துவைப் பல இடங்களுக்குப் போய்த் தேட வேண்டாம். இரண்டு எழுத்துக்களாலான பெயர் அது. ஸகல வேதங்களின் ஜீவரத்தினம். கோயிலில் மஹாலிங்கம் போலவும், தேகத்தில் உயிர் போலவும் அது வேதங்களின் மத்தியில் இருக்கிறது அதை என்ன பண்ண வேண்டும்? வாக்கினால் சொல்ல வேண்டும். யார் சொல்ல வேண்டும்? மனிதனாகப் பிறந்தவன் சொல்ல வேண்டும். ஊமையாக இல்லாத எவனும் சொல்லலாம் அதைச் சொல்லுவதற்குக் தான் நாக்கு இருக்கிறது. எல்லாரும் அதைச் சொல்லியாக வேண்டும். அதை ஒரு தரம் சொன்னால் போதும். ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். வேறொரு காரியத்துக்கு நடுவிலும் சொல்லலாம். சொன்னால் அந்த க்ஷணத்திலேயே அது பாவத்தைப் போக்கிவிடும்.

ஸ்ரீ காஞ்சிப் பெரியாள்வார்

---

மற்றவர்களது தவறுகளை சுட்டிக் காட்டுங்கள். தொடர்ந்து செய்கிறார்களா? தடுக்காதீர்கள். விட்டு விடுங்கள். திருந்தாதவர்கள் அனுபவித்துத் திருந்தட்டும். அதுதான் நிரந்தரத் தீர்வு.

---

# அன்பு வளர்க!

நாட்டில் சமாதானம் அமைதி, இன ஒற்றுமை இவை பற்றி எல்லாம் எல்லோரும் பேசி நின்றனர். பேசுவதில் மட்டுமல்ல; செயலிலும் காட்ட வேண்டும். ஒற்றுமை என்பது வேற்றுமை பாராட்டாமல் இருப்பது அல்ல. வேற்றுமையே கிடையாதென்ற தெளிவுதான் ஒற்றுமை! ஆண்டவன் ஒன்றே ஒன்று தான். ஆண்டவனைத் தவிர வேறு ஒரு பொருள் கிடையாது. எம் பெருமானைப் பற்றிய நினைவு ஒன்றுதான் நம் எல்லோரையும் ஒன்றிணைக்கக் கூடியது. மதமும் பக்தியும் சகலரும் மகிழ்ச்சிகரமாகயிருக்க ஏற்பட்டவையாகும். ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டு சீரழிவதற்கல்ல.

பக்திதான் மாபெரும் சக்தி. பக்திக்கு ஆதாரம் அன்பு. ஆண்டவன் கருணைக் கடல். அந்த அன்புக்குக், கட்டுப்படாதவர்களே இல்லையெனலாம். அன்பின் சக்திமகத்தானது. அன்பு, அன்பையே வளர்க்கும்.

நாட்டு மக்கள் அனைவரும் அன்பு வெள்ளத்தில் மூழ்க வேண்டும். நமது உள்ளங்கள் தூய்மையாக வேண்டும். தர்மம் செழித்தால் உண்மை சுத்திபெற்று விடும். வேதம்தான் தர்மத்தின் இருப்பிடம். அது அநாதி ஆனது. உலகத்துக்கே பொதுவான பொக்கிஷமாகும். அது நாடுபூராவும் முழங்க வேண்டும். தர்ம சிந்தையும், தெய்வ வழிபாடும், கருணை உள்ளமும் இந்து மதத்தின் சிறப்பான அம்சமாகும்.

ஒற்றுமையை வளர்க்க வேண்டுமானால் இவற்றை முதலில் வளர்க்க வேண்டும்

அன்பினால் விளைவது தான் உண்மையான சாந்தி ஒவ்வொருவருக்கும் மனச் சாந்தி ஏற்பட்டுவிட்டால் அமைதி தானாகவே ஏற்பட்டு விடும். முதலில் வேற்றுமையென்ற இருளை அகற்றினால் ஒற்றுமை தானாகவே வளர்ந்து அன்பு பெருகி நாடு அமைதியுடனும் சுபீட்சத்துடனும் மிளிரும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென நாம் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

—பொன்யோகி

---

### சகோதரர்களாக வாழ வேண்டும்

ஜாதி, மதம் இவற்றினை வெறியாட்டமாக்காதே! ஆண்டவன் ஒருவனே! அவனுக்கு எல்லோரும் பக்தர்கள்தான். ஆகவே சகோதரர்களாக வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.


லண்டனில்

இந்து கலாசாரம்

கிடைக்குமிடம்

★

**No. 11, Durley Avenue**
**Pinner Middsex**
**Has lJQ**
**United Kingdom**



மாத்தளை

ரவி சுவாமிகள்

**அங்கும்புற — உக்கல தோட்டத்தைச் சேர்ந்த திருமதி. பழனியாய் கிருஷ்ணசாமிக்கு பல வருடங்களாக தீராத நோயாக இருந்த ''வாய்வேக்காடு'' ஒரே நாளில் சுகப்படுத்தினர் ரவிசுவாமி, இது கட்டுக்கதையல்ல நேரில் கண்ட உண்மை!**

# விபூதி

— கோகுலன் —

★ இந்துக்களின் அணிகலன்!

★ இன்னல் தீர்க்கும் அருமருந்து!

★ இனிதுவாழ இறைவனுல் அளிக்கப்பட்டது!



திருமதி

பழனியாய்

கிருஷ்ணசாமி

''பன்சலத்தன்ன டக்டருக்கு நல்ல கைராசியாம் பச்சத்தண்ணியை ஊத்திக் குடுத்தாலும் நோய் சொகமாயிருமாம்''.

''பல்லேகம வெதமாத்தியாவிடம் கொண்டு போய்க் காட்டிப்பாருங்களே''.

''கந்தகட்டியில ஒரு நாட்டு வைத்தியர் இருக்காராம். அவர்கிட்டவாவது கூட்டிக்கிட்டுப்போய் பாருங்க''.

''இது செய்வினைகோளாருகத்தான் இருக்கும். எதுக்கும் பனிய வெயத்து கண்ணுசாமிய கூட்டிக்கிட்டு வந்து ஒரு 'மண்டு' வச்சுப் பாரேன்''.

''புஞ்சப்புகிட்டசொல்லி ஒரு நூலாவது, தாயத்தாவது போட்டுப்பாரு. எல்லாம் சரியாகும்.

எல்லாரும் கூறினர்கள்.

இப்படி எத்தனையோ டாக்டர்களை, நாட்டு வைத்தியர்களைப் பார்த்தாகிவிட்டது. நேர்த்திக்கு மேல் நேர்த்தி கோவில்களுக்கு வைத்தாகிவிட்டது.

நூல், தாயத்து மந்திரம் இவைகளில் எப்போதுமே எனக்கு நம்பிக்கை என்பதே கிடையாது.

எப்படியாவது அம்மாவுக்கு இந்நோய் சுகமாகிவிடாதா என்ற ஆசையில், பார்க்காத கோடங்கி இல்லை; கட்டாத நூல் இல்லை; போடாத தாயத்துகளில்லை.

அம்மாவுக்கு அப்படியொன்றும் தொத்துவியாதியோ, பயங்கரமான நோயோ இல்லை!

'வாய் வேக்காடுதான்'!

என்றைக்கு என் தம்பி பிறந்தானே அன்றிலிருந்து ஆரம்பித்ததுதான் இந் நோய்.

வாய் வெந்து போய்விட்டது என்றுல் ஒரு நாள், ஒரு வாரம் அவ்வளவுதான். சிறிது சிறிதாக உறைப்பை சாப்பாடோடு சேர்த்துக் கொண்டால் சரியாய்ப் போய்விடும்.

ஆனல் அம்மாவுக்கு அப்படி இல்லை. ஆரம்பத்தில் இருந்தே படிப்படியாகக் கூடிக் கூடி வாய் வெள்ளை வெளேரென்றுஆகிவிட்டது. வாயின் ஓரங்களில் புண்ணுகி, கடைசியில் பேசுவதற்கே நாக்கை அசைக்க முடியாத நிலையாகி விட்டது.

எனக்கு மனதுக்கு ரொம்பவும் வேதனையாகப் போய் விட்டது.

கொழும்பில் யாரையாவது கேட்டு, 'ஸ்பெஷலிஸ்டுகளை' யாவது சந்தித்தால் ஏதாவது முன்னேற்றம் காண முடியாதா என்று அதற்காக ஏற்பாடுகளைச் செய்து கொண்டு அம்மாவிடம் போனேன்.

''அட ஏண்டா நீயும் வேலைமெனக்கட்டுச் காச செலவழிச்சிக்கிட்டு'' என்று என்னைத் தடுத்து விடுவதுண்டு.

உறைப்பு என்பதை மறந்து ஏறக்குறைய இருபது வருடங்கள் உருண்டோடி விட்டன.

ஒரு கலியாண வீடா, சடங்கு வீடா எங்கேயும் அம்மாவைக் கூட்டிப்போக முடியாது. அப்படி முக்கியமாகப் போக வேண்டிய இடமாக இருந்தாலும் அங்கு போய்ச் சாப்பாட்டில் கலந்துகொள்ள முடியாது.

அம்மாவுக்கு மட்டும் உறைப்பில்லாமல் ஆக்கிப் போடுவார்களா?

வீட்டில் விதம் விதமாக மரக்கறிகளை எங்களுக்கு ருசியாக ஆக்கிக் கொடுத்துவிட்டு, அம்மாவுக்கு மட்டும், தேங்காய்ப் பாலில் ஏதோ ஒப்புக்கு ஒரு மரக்கறியை வெட்டிப் போட்டு சமைத்துக் கொள்ளும்.

தேங்காய்ப்பால் கறியில் கூட, நாங்கள் உறைப்புக் கறிகளுக்குப் பாவிக்கும் கரண்டிகளைப் போட்டு அம்மாவின் கறியை ஊற்றி விட்டால் கூடப் போதும், ஒரு பீங்கான் சோறு சாப்பிடு முன் அம்மாவின் கண்களிலிருந்து ஒரு கோப்பை நீர் வழிந்து ஸ்......ஸ்........ என்று சாப்பிடுவதைப் பார்க்கும்போது—நாங்கள் சாப்பிட்டது 'எங்கோ' என்றுகிவிடும்.

நேரம் கிடைக்காவிட்டால் சோற்றில்தண்ணீரை ஊற்றிக் கரைத்துக் கஞ்சி

(8ம் பக்கம் பார்க்க)

(7ம் பக்க தொடர்ச்சி)

யாகக் குடித்து விட்டு, 'மலைக்கு' போய் விடுவது முண்டு.

இப்படியே இது பழகியும் போய்விட்டதால், மேற் கொண்டு எதையும் சிந்திக் கவோ, அதற்காக மீண்டும் ஏதாவது செயல்பட்டு, செல வழித்து முன்னேற்றத்துக் கான நடவடிக்கையில் ஈடு படவோ யாருக்கும் அக் கறையே இல்லாது போய் விட்ட நிலையில்தான் அந்த அபூர்வ சம்பவம் நடந்தது.

என்னோடு வேலை செய் யும் நண்பர் ஒருவருக்கு மாத்தளையில் கலியாண ஏற் பாடுகள் நடந்து கொண் டிருந்தது. கலியாணம் அவி சாவலையில் நடந்தது என்று லும் பெண் வீடு நேர்த் மாத்தளை என்ற படியால் நானும் மாத்தளைக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

நேரத்துக்கு முன்ன தாகவே மாத்தளைக்கு வந்து விட்டதால், மாத்தளையில் சிறிது நேரம் தங்கிவிட்டு, சரியான நேரத்துக்கு, நேர்த் மாத்தளை செல்வது என்று தீர்மானித்தார்கள்.

எங்கு தங்குவது என்ற கேள்வி எழும்போதுதான் 'மாத்தளை காந்தி நிலையத் தில் தங்கலாம்' என்று நண் பர் கூறினார்.

காந்தி நிலையத்தில்தான் அந்த அற்புத மனிதர் இருந் தார். அச்சமயம் பிரபல சுவாமியாகி இருந்தார்.

மாத்தளை சுவாமி, ரவி சுவாமி என்று பேர் பெற்று பல புதுமைகளைச் செய்திரு ந்தார்.

புதுமண தம்பதிகள், அங்கு தங்கியிருந்தபோது தம்பதிகளை ஆசிர்வதிக்க 'சுவாமி' வர வேண்டும் என்றார்கள்.

காத்திருந்தோம்.

''சுவாமி இப்போது தியானத்தில் இருக்கிறார். தியானம் முடிந்த பிறகு தான் வருவார்'' என்றார் கள்.

எனக்கு ஒரே ஆச்சரியம். மாத்தளையில் இப்படி ஒரு வர் இருக்கிறாரா? அல்லது அப்பாவி மக்களை ஏமாற்றி ஏதாவது 'கண்கட்டி' வித்தை செய்கிறாரோ? என்ற சந்தேகம் வந்துவிட் டது.

நண்பர் — சுவாமியைப் பற்றிப் பெருமையாகப், பேசிக்கொண்டிருந்தார்.

''ஒருமுறை ரொம்பவும் வறுமையில் வாடிய பெண் ஒருத்திக்குத் தாலிக்கொடி எடுத்துக் கொடுத்தாராம்''

நெருங்கிய நண்பர் ஒரு வருக்கு வெறுங்கையைக் காட்டிவிட்டு விரல்களை மடித்துப் பிறகு திறந்த போது பெயரில்லாத — ஊர் இல்லாத ஒரு கைக்கடி காரம்—கொடுத்தாராம்''.

''ஒவ்வொரு சிவராத்திரி இரவும் வாயிலிருந்து லிங் கங்கள் எடுப்பாராம்''.

ஒவ்வொன்றையுக்கேட்ட பொழுது எனக்கு ஆச்சரிய மாகவும் வியப்பாகவும் இரு ந்தது. எப்படியும் இவரைச் சந்திக்க வேண்டும்—எனத் தீர்மானித்தேன்.

அவரின் தரிசனத்துக்காக நிறையபேர் காத்திருந்தார் கள். சிங்களவர்களும்தான்!

சுவாமிக்குச் சிங்களமும் தெரியும். உண்மையிலேயே இவர் பாடசாலையை சிறு வயதிலேயே விட்டுவிட்டா ராம் இவரிடம் ஏதோ ஒரு மாய சக்தி இருக்கிறதாகப் பேசிக்கொண்டார்கள்.

வரும்வரை காத்திருந் தோம்.

வந்தார்! இதுவரை கட வுளிடம் பேசிக் கொண்டிரு ந்தாராம்! சொன்னார்கள்!

மஞ்சள் நிறக் காவி உடை அணிந்திருந்தார். சட்டை இல்லை. ஸ்ரீ சத்ய சாயிபாபா போன்ற தலை முடி!

திருமணத் தம்பதிகள் விழுந்து வணங்கினார்கள். வாழ்த்திய அவர் வலது கையை மேலே உயர்த்தி உதறுவது போல் பணித் தார். உள்ளங் கையில் விபூதி இருந்தது. கொடுத் தார்!

கண்ணாரக் கண்டேன். எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கேட்டு விட் டேன். எப்படி இதைச் செய்கிறீர்கள் என்று.

கோவூர் கூட இப்படி யெல்லாம் செய்து காட்டிக் கொண்டிருந்த காலம் அது.

எனது சந்தேகத்தைத் தீர்த்தார். அதாவது முன் னரெல்லாம் நான் சட்டை அணிவதுண்டு. சட்டைக் கையில் வைத்து இவர் விபூதி எடுக்கிறார் என்று சொன்னார்களாம்! அதனால் இப்போது சட்டையே போடுவதில்லை என்றார்.

கடவுளின் நாமத்தைச் சொல்லிக் கேட்கிறேன். விபூதி வருகிறது என்றார்.

எனக்கும் தந்தார். வாங் கினேன். வாசனையாகவும் இருந்தது. அப்பவும் என க்குச் சந்தேகம் நீங்கவில்லை.

எத்தனையோ பேர் 'கியூவில்' நின்று நோய்களை கூறி—பரிகாரம் கேட்டுக் கொண்டார்கள்.

எனக்கு அம்மாவின் நினைவு வந்தது. அம்மாவை கூட்டிவந்தால் சுகம் கிடை க்குமா என்று சந்தேகம்!

சிங்கள பெண்களும் வரிசையில் நின்றார்கள்.

''சுவாமி ஏன் சிங்களவர் கள் நிறைபேர் உங்களிடம் வருகிறார்கள்'' என்றேன்.

''உண்மையிலேயே அவர் களுக்குத்தான் தெய்வபக்தி அதிகம்'' என்றார்.

எனக்கு 'சுறுக்' கென் றது. என்னைத்தான் குறிப் பிட்டுச் சொல்கிறாரோ என்று! என்றாலும் அம்மா வின் நோயைப் பற்றிக் கூறி னேன்.

''சுகமாகும் என்ற நம் பிக்கை இருந்தால் அழை த்து வரலாம்'' என்றார்.

மறுநாளே அம்மாவைக் கூட்டிக் கொண்டு ரவி சுவாமிமுன் நின்றேன்.

அம்மா சுவாமியை விழு ந்து வணங்கினார்கள்.

சுவாமி கண்களை மூடிக் கையை ஆட்டி விபூதி எடுத் துக் கொடுத்தார். வாயி லும் போட்டுக் கொள்ளச் சொன்னார்.

விபூதிதான் — மருந்து அவ்வளவுதான்!

என்ன ஆச்சரியம்! அன்றே அம்மா நல்ல உறைப்புடன் சாப்பிட்டார் களே!

சிரித்துச் சிரித்து அம்மா சாப்பிடுவதைப் பார்த்து என் கண்களில் நீர் வழிந் தது—சந்தோஷத்தில்!

(1ம் பக்க தொடர்ச்சி)

இந்து............

சரித்திர ஆய்வுகளுக்கும் அப்பாற்பட்டது. அது வேறு பல சமயங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இப்போது இலங்கையின் வடக்கேயும் கிழக்கேயும் மலைநாடுகளிலுமே அதிக இந்துக்கள் வாழ்கின்றனர். பெருமளவு இந்துக்களைக் கிறிஸ்தவர்களாகவும் முஸ்லிம்களாகவும் மதமாற்றல் காலத்துக்குக் காலம் வெற்றியளிக்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது. அந்நியர் ஆதிக்கம் செய்த காலத்தில் இந்துக்கள் பயத்தினாலும் வறுமையின் காரணத்தினாலும் உத்தியோகம் போன்றவற்றிற்காக மதம் மாறினர் ஆனால் அத்தகைய மதமாற்றம் இப்போது பொய்யான காரணங்கள் கூறி வெவ்வேறு சாக்குப் போக்குகளுக்காக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன துரதிஸ்டவசமாக இந்த நாட்டில் வாழும் இந்துக்கள் அப்பட்டமான சுயநலநோக்கங்களுக்காக மதம் மாறத் தூண்டப்படுகிறார்கள். பற்பல குழுவினராகத் தங்களைப்பிரித்துக்கொண்டு அரசியல் மற்றும் சமய நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் மதமும் மக்களும் அவர்களுக்குத் தந்த பொறுப்புக்களையும் கடமைகளையும் மறந்து தங்கள் சுயநலத்திற்காகத் தத்தம் பெயருக்காகவும் புகழுக்காகவும் பிரபல்யத்திற்காகவும் பணம், கீர்த்தி போன்றவற்றில் ஆசைப்பட்டுத் தங்கள் இனத்திற்கான நன்மைகள் அனைத்தையும் மறந்து செயல்ப்பட்டனர். இதன் விளைவாக நாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. நிலையற்றதன்மை ஒற்றுமை இன்மை அவமானம் சுயமரியாதை இழப்பு நியாயமான உரிமை என்பவற்றை இழந்து நிற்கிறோம். மலைநாட்டிலும் கூட எத்தனையோ கிறிஸ்தவ நிறுவனங்கள் அவர்கள் இருக்கும் பகுதியில் இந்துக்களுக்கு எதிராகச் செயல்பட ஆரம்பித்துள்ளன. கல்வி அறிவற்ற தொழில் ஆளர்கள் பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறியுள்ளனர். இதனால் வடக்கு கிழக்கேயும் மலைநாட்டிலும் வாழுகின்ற இந்துக்களின் அடிப்படை உரிமைகள் பல வழிகளிலும் அவர்களிடம் இருந்து கவர்ந்து செல்லப்பட்டுள்ளது

## அரசியற் சூதாட்டம்

கிறிஸ்தவ நிறுவனங்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்ற சில அரசியல் கட்சிகள் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் நடத்தியபாரிய அளவிலான அரசியற் சூதாட்டங்களும் உண்டு. அதன் விளைவாகச் சாதாரண இந்து சமூகம் இந்தச் சூழ்ச்சிகளுக்கு இரையாகி அமைதியற்ற சூழ்நிலையும் வெறுப்பும் அவர்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளன. எங்களது அரசியற் கட்சிகள் கிறிஸ்தவ நிறுவனங்களில் இரகசிய பிரசாரர்கள், ஆகினர்.

## 15 சதவிகிதம் எப்படி உயர்ந்தது?

இனப்பிரச்சினை ஏற்றுக் கொள்ளும் வகையில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டால் கிறிஸ்தவர்களுக்கு அது பெரும் ஏமாற்றமாகவே அமையும். ஏனெனில் வன்செயல் இந்த நாட்டில் உள்ளமட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாவார்கள். நிவாரண உதவி என்ற போர்வையில் மத மாற்றத்திற்கு அது நல்ல வேட்டைத் தளமாகும். நாட்டின் இனக் கலவரம் தோன்றியபின் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 15 சதவிகிதத்தில் அதிகரித்துள்ளது. அரசாங்கம் இதனை அறிந்தும் உள்ளது. ஆனால் அரசாங்கம் இதில் அக்கறை கொள்ளவில்லை. காரணம் அரசாங்கத்திடம் கிறிஸ்தவ ஆலய சபையினரின் செல்வாக்கு அதிகம் உள்ளது.

## இளைஞர்கள் தீவிரமாக சிந்திக்க வேண்டும்

''தமிழ் ஈழ பிரதேசங்களில் வாழும் இந்து இளைஞர்கள், எதிர் காலத்தைப் பற்றி தீவிரமாக சிந்திக்க வேண்டும். இந்துக்கள் கட்டாயமாக அரசியல் அல்லது சமூக நிறுவனங்களில் சமமாக அங்கம் வகிக்க வேண்டும். சமூக அமைப்புக்களில் பிரசைகள் குழுக்களில் விளையாட்டுச் சபைகளில் கிராம அபிவிருத்திச் சபைகளில் அதுபோன்ற இன்னொரன்ன வேறு அமைப்புக்களில் இந்துக்கள் கூடுதலாக அங்கம் வகிக்க இடம் தரப்பட வேண்டும். கிறிஸ்தவர்களுக்கும் விகிதாசாரமுறையில் அங்கம் வகிக்க ஆசைப்பட்டால் அவர்களும் அங்கம் வகிக்கலாம். பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் இந்துப் பிள்ளைகளுக்கு இந்துக்களே கற்பிக்க வேண்டும். கிறிஸ்தவ பிள்ளைகளுக்குக் கிறிஸ்தவர்கள் கற்பிக்கலாம். இந்து கலாசாரத்திற்கும் இந்து நாகரிகத்திற்கும் இந்து முறைகளுக்கும் இந்து மரபுகளுக்கும் வழமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

## போட்டியும் பொறுமையும் வேண்டாம்

இந்துக்களிடையேபோட்டியும் பொறுமையும் இல்லாதிருத்தல் வேண்டும். படித்த பண்பாடுடைய இந்து பெரியோர்களிடம் இவ் விளைஞர்கள் அறிவுரைகளையும் உதவிகளையும் கேட்க வேண்டும். ஐரோப்பியக் கொள்கைகளைக் கைவிட்டு இந்துமுறைப்படி ஒழுகுதலை வாழுதலைப் பெருமை என எண்ணி விரிவுரைகள் புகழ் பெற்ற இந்துக்கள் மூலம் நடாத்தப்பட வேண்டும். தமிழ் ஈழம் சுய மரியாதை உள்ள இந்து சமூகத்தை உள்ளடக்கிப் பெருமை கொள்ள வேண்டும். இந்த இலக்குக்காக எல்லா இந்துக்களும் சுயநலமற்ற ஒத்துழைப்பை நல்க வேண்டும். இளைஞர் சமூக சேவை அமைப்புக்கள் பெண்கள் சமூக அமைப்புக்கள் இளம் மாணவர் குழுக்கள் இன்னும் மற்ற அமைப்புக்கள் போன்றவை இந்துக்களின் மத்தியில் அதிகம் ஏற்பட வேண்டும். அவ்வமைப்புக்களில் உள்ள அங்கத்தவர்கள் வகுப்புக்களை ஏற்படுத்தி பொது, சமய, உலக ரீதியான அமைப்பை வளர்க்க உதவ வேண்டும்.

## சுயநலமற்ற சமூக சேவையில் ஈடுபட வேண்டும்

இந்து சமயத்திற்கென வகுத்துள்ள ஒழுக்க கோட்பாடுகளைக் கடைப் பிடித்து நேர்மையான வாழ்வு வாழ வேண்டும். களவு, ஏமாற்று போன்றவற்றைத் தவிர்த்து சுயமரியாதையுடன் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்யும் நோயாளிகளைக் கவனிக்கும் சுயநலமற்ற சமூக சேவைகளில் ஈடுபட வேண்டும். இவைகளை இந்து நிறுவனங்களின் மூலம் செய்து இந்து சமயத்திற்கே உரிய வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். பலாத்காரமும் வன்முறையும் முற்றாகத் தவிர்த்தொழிக்க

(11 ம் பக்கம் பார்க்க)

# இந்து கலாசார மன்றமும்

# மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்

''கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றமும் மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்'' என்ற தலைப்பில் நாம் எழுதி வரும் தொடர் கட்டுரையைப் படித்த ஏராளமான நமது வாசக நேயர்களும் இந்து கலாசார மன்றத்துடன் தொடர்புள்ள பல சைவப் பெரியார்களும் நமக்கு ஒரு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர். இந்த வேண்டுகோளை நிராகரிக்கும் துணிவு நமக்கு ஏற்பட மறுக்கிறது. நமது வாசக நேயர்களின் அபிப்பிராயத்துக்கும் சைவப் பெரியார்களின் வேண்டுகோளுக்கும் நாம் தலை சாய்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

''இந்துகலாசாரம் பத்திரிகை ஆரம்பித்து ஒரு சில மாதங்களே ஆகின்றன இந்த ஒரு சில மாதங்களில் இப்பத்திரிகைக்கு கிடைத்துவரும் ஆதரவும் பாராட்டும் நம்மை பிரமிப்படையச் செய்கின்றன. நமது வாசக நேயர் ஒருவர் பின் வருமாறு எழுதுகிறார்:— ''நீங்கள் ஒரு உன்னதமான பணியை மேற்கொண்டிருக்குகிறீர்கள். இந்து கலாசார மன்றமும் இந்து கலா கலாசாரம் பத்திரிகையும் கொள்ளுப்பிட்டியில் இதுவரை யாருமே செய்யாத செய்யத் துணியாத காரியத்தைச் செய்து வருகிறீர்கள்''.

---

**கடவுள் நம்மை, தண்டிக்க விரும்பும்போது நம் ஆசைகளைப் பூர்த்தி செய்கிறார்.**

---

## மாண்புமிகு அமைச்சர் தொண்டமான்

''இந்து சமய மக்களுக்காகச் சமய அறிவை மேம்படுத்தும் வகையிலான சஞ்சிகை எதுவுமே இந்நாட்டில் வெளிவராத இக் காலகட்டத்தில் அத்தேவையை உணர்ந்து ஓர் சஞ்சிகையை வெளிக் கொணர்வது பாராட்டுக்குரியதாகும். என் ஆசியும் ஆதரவும் என்றும் உங்களுக்கு உண்டு'' என்று கௌரவ மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பாராட்டியிருக்கிறார்.

## தினகரன் பாராட்டுகிறது

''இந்து மக்களின் தணியாத தாகத்தைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு வெளியீடு இல்லையே என்று ஏங்கிய, உள்ளங்களுக்குப் பால் வார்த்தது போலிருக்கிறது இந்த வெளியீடு. இதை ஒரு பத்திரிகை என்று கூறாது பல அம்சங்களைக் கொண்ட சஞ்சிகை என்றே கூறத் தோன்றுகிறது. எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் பக்தி மணம் வீசுகின்றது. பல சைவப் பெரியார்கள் இந்த வெளியீட்டை வாழ்த்தியிருப்பது உண்மையிலேயே பொருத்தமானதும் போற்றக் கூடியதாகும்'' என்று இலங்கையின் பிரபல தினசரிப் பத்திரிகையான திவகரன் பாராட்டியிருக்கிறது.

இக்குறுகிய காலத்தில் இத்தகைய பாராட்டைப் பெற்றிருக்கும் உங்கள் பத்திரிகையை நானும் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பொறுமையால் உந்தப்பட்டு தவறான காரியங்களைச் செய்த ஒரு மனிதனை மன்னிக்கக் கூடாதா?

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்று தமிழ் வேதம் கூறுகிறதே. அருமையான ஒரு சஞ்சிகையில் ஒரு பக்கம் கறைபடுகிறதே என்பது தான் என் கவலை''.

நமது வாசக நேயரினதும் மற்றும் பலரது வேண்டுகோளுக்கிணங்க இக் கட்டுக் தொடரை நிறுத்த விரும்புகிறோம்.

ஆனால் ஒரு முக்கிய சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறோம்.

பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ் தொண்டமான், மாகாண சபை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோரிடம் இப் பாடசாலை அபிவிருத்திக்காக, புதுக் கட்டடம்

(11 ம் பக்கம் பார்க்க)



இந்து கலாசார மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க புதுக்கட்டடத்துக்கு அத்திவாரக்கல் நாட்டுவதற்கு வருகை தந்த மாகாண அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களை இந்து கலாசார மன்ற அப்போதைய தலைவர் திரு ஏ. எம். துரைசாமி மாலை சூட்டி வரவேற்கிறார்.

★ மலையகத்தில் மதமாற்றக் கெடுபிடியை நிறுத்து !

★ இந்து சமயம் போதிக்க போதிய ஆசிரியர்களை நியமி !!

★ ஆசிரியர்கள் பற்றுக் குறை என்பது கேலிக்கூத்து !!!

★ பெரும்பான்மையாக இந்து சமயப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் இந்து அதிபர்களை நியமி !!!!

மேற்கூறிய கோரிக்கைகளை வென்றெடுக்க

# இந்து இளைஞர் மகாநாடு

*(கொழும்பில் நடைபெறவிருக்கிறது. விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.)*

## இந்து இளைஞர்களே அணிதிரளுங்கள்!

*(10 ம் பக்க தொடர்ச்சி)*

**இந்து............**

ஒன்று போட்டுத் தரும்படியும் இந்து கலாசார மன்றம் பல தடவைகள் நேரில் சந்தித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்து கலாசார மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் அதிபரையும் மாகாண சபை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்களை நேரில் சந்தித்துப் பாடசாலையில் இட நெருக்கடி இருப்பதால் புதுக்கட்டடம் ஒன்று போட்டுத் தரும்படி கேட்டுக் கொள்வதற்காக ஒரு குழுவை அழைத்துச் சென்றது. அமைச்சர் செல்லச்சாமி அவர்களைக் குழுவினர் நேரில் சந்தித்துப் பாடசாலை நிலைமையை விளக்கும் வரை இப்படி ஒரு தமிழ்ப் பாடசாலை கொள்ளுப்பிட்டியில் இருப்பது இதுவரை தமக்கு தெரியாதென்றும் இந்து கலாசார மன்றத்தினர் தமது கவனத்துக்குக் கொண்டு வந்தபின்னரே தமக்குத் தெரியவந்ததென்றும் கூறினார். இப்பாடசாலைக்காகக் கண்ணீர் வடிப்பது இந்து கலாசார மன்றம் ஒன்று தான் என்று அப்பொழுது அதிபர் கூறினார்.

மாவட்ட சபை மூலம் அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்கள் ரூபாய் 50,000 ஒதுக்கிப் புதுக் கட்டடத்துக்கு அத்திவாரக் கல் நாட்டு விழாவில் பெருந்திரளான மக்கள் மத்தியில் அமைச்சர் அவர்கள் இதைப் பகிரங்கமாகக் கூறினார்.

கட்டடம் போட்டுக் கொடுத்த பெருமை இந்து கலாசார மன்றத்துக்கு உண்டு என்பதைப் பாடசாலை அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் மறுக்க முடியாது.

இக்கட்டுரை தொடரை இத்தோடு நாம் நிறுத்திக் கொண்டபோதிலும் அவசியம் ஏற்பட்டால் மேலும் பல தகவல்களைப் பொது மக்கள் முன் சமர்ப்பிக்கத் தயாராய் இருக்கிறோம்.

*(9 ம் பக்க தொடர்ச்சி)*

**சுயநல............**

வேண்டும். மனித உணர்வுகளான அன்பு, இரக்கம், கருணை இவைகளைத் தோற்றுவிக்க வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் எந்நிலையிலும் சுய மரியாதை பாதுகாக்கப்பட்டு மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்.

வெளிநாட்டு மதங்கள் என்னும் வலையில் வீழாமல் எல்லா இந்துக்களும் தன்னம்பிக்கையுடன் தங்கள் மதத்தை வளர்க்கப் பாடுபட வேண்டும். நாம் எல்லோரும் ஒரு இந்துக் குடும்பம் என நினைத்து அணி வகுத்து முன் செல்வோமாக.

**நன்றி: "காங்கிரஸ்"**

(2 ம் பக்க தொடர்ச்சி)

**அன்பே..........**

அன்பு அனைத்தையும் தாங்கக் கூடியது. யாவற்றையும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. எதையும் எதிர்பார்க்காதது. பிரதிபலனை தன்மையைக்கூட ஏந்தி நிற்காதது. ஆடைகளுக்கு முதலிடம் கொடுக்காதது. பெருமையையும், சிறுமையையும் பொருட்படுத்தாதது. வாழ்வையும் தாழ்வையும் ஒன்றாக எண்ணுவது. எந்த வரைமுறைகளுக்கும் உட்படாது தூய்மையாக நிற்பது.

அந்த தோன்றும் இடத்துக் கேற்ப நட்பு, பாசம், காதல், கருணை எனப் பல விதமாக மலர்கிறது. அந்த வகையில் இறைவனிடம் உயிர்கள் காட்டும் அன்பு பக்தியாகவும் உயிர்கள் மாட்டு காட்டும் பெருங் கருணை அருளாகவும் பொழிகிறது.

பக்தியும் அருளும் உருவாக்கும் பாலத்தில் உயிர்களின் பிறவிப் பிணி தீருகிறது. பேராண்மை பிறக்கிறது. இந்தப் பக்தியும், அருளும் ஒன்றின்பால் மற்றொன்று தொடர்புடையதாக வழிபாட்டு நெறிகள் வழி வகுக்கின்றன. இந்த நெறிகளைச் சைவ நீதி சைவ நாற்பதங்கள் என வகுக்கிறது. இதையே நாம் சைவ நாற்படிகள், சைவ நன்னெறி, சிவ புண்ணியங்கள் என்றும் அழைக்கிறோம்

நமது நாயன்மார்கள் நமக்கு இந் நான்கு மார்க்கங்களையும் விளக்கும் உதாரண புருஷர்களாய் சிவத்தொண்டாற்றியுள்ளனர்.

சரியை, கிரியை, யோகம் ஞானம் ஆகிய இந் நான்கு மார்க்கங்களும் முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப்படுகின்றன.

சரியையாவது ஆன்மாக்கள் எல்லாம் வல்ல இறைவனின் திருமேனிகளையும் புற வழிபாடுகளினால் வழிபட்டு நிற்பதாகும். சிவனடியார்க்கும், சிவாலயத்துக்கும், திருத்தொண்டுகளை அடியவராக நின்று புரிந்து நிற்பதே இது. இந்த நெறியில் நின்று இதற்குரிய சாலோக முத்தி பெற்றவர் திருநாவுக்கரசு நாயனார் ஆவர்.

இறைவனின் அருவுருவத் திருமேனியினை அகத்தும், புறத்தும் பூசிப்பதே கிரியையாகும். மகன் நிலையில் நின்று இவற்றைப் புரிந்து சாமீப முத்தியினைப் பெற்றவர் ஞானசம்பந்தப் பெருமான் ஆவர்.

அகத்தே இறைவனை பூசித்து சிவமே உள்ளொளியாய் வியாபிக்க தோழமை உளவில் விளங்கும் யோக வழிபாட்டில் சாரூப முத்தியெய்தியவர் சுந்தரர் சுவாமிகள் ஆவர்.

எல்லா வித எல்லைகளையும் மீறி ஞான வழியில் நின்று நிட்டையில் கூடும் மோன வழிபாடே நான்பாதங்களின் இறுதி வழிபாடாகும். பதி, பசு, பாசம் ஆகிய சைவ சித்தாந்த உண்மைகளின் அறிந்து, சிந்தித்து, தெளிந்து, நிட்டையில் நிலைத்து சாயுச்சிய முத்தி பெற்ற பெருமைக்குறியவர் மாணிக்கவாசகர்.

நான்கு நெறிகளிலும் நின்று நல்ல ஒளி கண்ட நால்வர் நின்ற ஒழுக்கங்கள் அன்பை அனைத்து மேன்மை ஆதாரமாகக் கொண்டவை. அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட அந்த ஆண்டவனின் அடியார்கள் நமக்குச் சொல்லித் தந்துள்ள வழி அன்பு வழியாகும் ஆண்டவன் அருளைப் பெற அதுவே சிறந்த வழியாகும். அன்பும் சிவமும் இரண்டல்ல. அவை இரண்டும் ஒன்றே.

கொழும்பு 7-ல் பிரசித்திபெற்ற ஒரே சைவ ஓட்டல்

★ விதம் விதமான தின்பண்டங்கள்

★ சுவையான சைவ சாப்பாடு

★ குளிர்பானங்கள்

★ தோசை, இட்டலி, இடியப்பம் முதலியவைகளுக்கு

## நியூவ் லெட்சுமி பவான்

14, சர் ஏனர்ஸ்ட் சில்வா மாவத்த (பிளவர் ரோட்)

கொழும்பு-7.

கொள்ளுப்பிட்டியில் . . . .

சுத்தமான நெய் சுத்தமான நல்லெண்ணெய்

பலரகமான ஊறுகாய்கள் குளிர்பானங்கள்

சுவையான சைவ உணவுகளுக்கு

பிரசித்தி பெற்ற இடம்

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

# இந்துமதி லொட்ஜ்

201, காலி வீதி,

கொள்ளுப்பிட்டி.



நடன, இசை மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி !

★ நடனம் இசை தொடர்பான அனைத்து புத்தகங்களையும் வாங்குவதற்கும்

★ இவை தொடர்பான கேசட்டுகளை வாங்குவதற்கும்

★ பரத நாட்டிய நகைகள், தாளம், நட்டுவாங்கம் சலங்கை, பூக்கள் அழைப்பிதழ்கள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்

★ தலை சாமான்களையும், பரத நாட்டிய நகைகளையும் தலைப்பாகை போன்றவற்றையும் வாடகைக்கு பெறவும்

★ பரதம் தொடர்பான எல்லா தேவைகளுக்கும்

★ திருமணம் தொடர்பான எல்லா தேவைகளுக்கும் அலங்காரத்துக்கும் அணுகிப் பயன் பெறுங்கள்

# சப்தகிரிஸ்

27, சில்வர் சிமித் லேன்,

கொழும்பு 12.

# பாரதீய பரமார்த்த வாஹினி

**பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபா**

## உன்னைப்போலிரு ………

எல்லாவற்றையும் உய்விக்கும் ஆத்ம தத்துவத்தை நன்குணர்ந்தவன் பிறர் மதங்களைக் கண்டனம் செய்யான். சமயங்களைப் பற்றிய எந்தவிதமான சச்சரவுகளிலும் பங்கு கொள்ளான். மாற்றான் கொண்டுள்ள சமயப் பற்றுறுதியை, வெறுக்கவோ, கலைக்கவோ யத்தனம் செய்யான். ஆன்மீக உணர்ச்சி அற்றவனும், பேருண்மையின் ஆழ்ந்த கருத்துக்களை அறியாதவனுமே பிற மதங்களைக் கண்டனம் செய்யும் வேலைகளில் ஈடுறுவான். சமய சச்சரவுகளைத் தூண்டி விடுவது, அவைகளில் பங்கு கொள்வது, கடவுள் வழிபாட்டுக்காகப் பிறர் கையாளும் ஆசாரங்களையும், சடங்கு விதி முறைகளையும் ஏளனம் செய்வது, அவர்களின் சமய ஒழுக்கங்களை மூட நம்பிக்கைகளென்று தூற்றுவது இவை மானிட தகுதிக்கு ஏற்காத செயல்களாகும். ஏனெனில், ஒவ்வொருவனுக்கும் அவன் பின்பற்றும் வழி முறைகளும் அவனுக்கு ஆனந்தத்தை அளிப்பதினாலல்லவோ அவைகளைக் கையாண்டு செயல்படுகின்றான்!

'பன்மை' எனப்படும் யாவும் 'ஒருமை'யே என்பதை அறிந்தவர் கற்றுணர்ந்தார். அவரவர்களுடைய, புத்தி கூர்மைக்கும், உணர்ச்சிக்கும் தக்கபடி, அவரவர்களுடைய நோக்குக் கேற்றபடி பலரால் பலவிதங்களில் ஒரே ஒரு பொருள் பலவாறு காட்சியளிக்கின்றது. அவ்வாறு அப்பெரும் பொருள் பற்பல பொருளாகக் காட்சியளிக்கக் கூடாதென்று சொல்வது எவ்வாறு பொருந்தும், சொல்லத்தான் கூடுமோ? அவ்வாறானால் அது தப்பிதம், ஒவ்வாது என்று சொல்ல முடியுமோ? அதை மறுக்கவோ, இழித்துப் பேசவோ யாரொருவருக்கும் உரிமையில்லை.

இங்கு, இப்போது நிலவும் நிலையைக் கடந்து மேம்பாடுற்ற நிலையை நாடுபவர்களும், இறைத் தன்மையின்



மிருதிப் படியான தத்துவத்தை உணர்ந்தவர்களுமே ''இந்து'' என்ற பெயரால் அழைக்கப்படுவதற்கு அருகதையானவர்கள். பிறருக்குத் துன்பம் விளைவிப்பதில் இன்பம் காண்போர்களை இந்துக்கள் என்று சொல்வது தகாது.

பாரதிய பண்பாட்டின் கருப்பொருள் யாதெனில் ஒவ்வொரு இதயத்தையும் முழு மொத்தமான பேரன்பினால் நிரப்பக் கூடிய ஏக ஆத்ம தத்துவ விளக்கத்தைப் பற்றி அறிந்து கொள்வதே. இவ்வாறான பரம் பொருளொற்றுமையை நன்கறிந்து, அக்கருத்திலேயே நிலைக்கும் யாவரும், எத்தேசத்தவராயினும், எம்மொழியைப் பேசுவராயினும், பாரதியர்களின் உற்றார், உறவினர்களேயாவார்கள். மனிதன் சடப் பொருளாலாகிய ஒரு மூட்டை, அம்மூட்டை இயைபியல், மருந்து இவைகளின் சட்டங்களுக்கு உட்பட்டதென்ற தத்துவத்தை அடிப்படை நம்பிக்கையான பல மானிட சமுதாயங்கள் கொண்டுள்ளன. மேனாட்டில் இறப்பு என்பது ''உயிரை அல்லது ஜீவனை இழக்கும் செயல்'' என்று மொழியப் படுகின்றது. ஆனால் பாரத மொழிகளிலோ இறப்பென்பது ''இவ்வுடலை அல்லது தேகத்தைத் தகர்ப்பது'' என்று பொருள்படுகின்றது. இம்மாதிரியான வேறுபாட்டிற்குக் காரணம் மேனாட்டார் தங்களை உடல்கள் என்று நம்புகின்றனர், பாரதியர்கள் தங்களை உடல்களல்லவென்று மறுக்கின்றனர். தங்களுடைய உண்மைச் சொரூபம் ஆத்மாவே, அவ்வாத்மாவே இவ்வுடல்களிலுள்ளவை என்ற உண்மையை உணர்ந்தவர்கள், அவ்வுண்மையை உறுதியாகக் கூறுபவர்கள் பாரதியர்கள். இவ்விரண்டு நோக்கங்களுக்கும் இடையே பரந்த வேறுபாடுகளுள்ளன. அடிக்கடி மாறுபாடடையும் மணல் திட்டுகள் போன்ற, இவ்வுலக இன்பங்களை அடித்தளமாகக் கொண்ட நாகரீகம் குறுகிய காலமே நிலைத்திருக்கும். அது வெகு விரைவிலேயே இப்பூமியிலிருந்து துடைத்தெறியப் படும். அதற்கு மாறாக, பாரதிய நாகரீகமும், பாரதத்தைப் பின்பற்றி ஒழுகும் ஏனைய நாட்டு நாகரீகங்களும் பல நூற்றாண்டுகளாக நிலைத்து நிற்கின்றன. இன்றும் உயிர்ப்புடன் உயர் நிலையில் உரமுடன் காண்கின்றன. உற்பத்தித் திறனுடைய அடையாளங்களுடனும் புத்துயிர் வளப்பங்களுடனும் விளங்குகின்றன. பல்வேறு நாகரீகங்களையும், பண்புகளையும், ஏற்று, அவைகளைப் பின்பற்றி நடப்பதே தங்கள் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட பாரதியர்கள் யாவரும் இவ்வுண்மையை மறவாதிருத்தல் வேண்டும்.

பிறரைப் பின்பற்றி நடப்பதினால் நிரந்தரமான ஒரு பண்பாட்டை நிலைநாட்ட இயலாது. அது ''நாகரிகமும்'' ஆகாது. அது கோழைத்தனத்திற்கு அறிகுறியாகுமேயன்றி மேம்பாட்டிற்கு வழி வகுக்காது. அது அழிவிற்கமைந்த ராஜபாட்டையாகத்தான் அமைந்துவிடும். தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, தான்

(15ம் பக்கம் பார்க்க)

இந்து சலாசாரம்
(இந்து சமய திங்கள் இதழ்

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 30.00 |
| ஆறு மாதம் | ரூ. | 15.00 |
| மூன்று மாதம் | ரூ. | 7.50 |
| தனிப் பிரதி | ரூ. | 2.00 |

விவரங்களுக்கு:—

நிருவாகி,
இந்து கலாசாரம்,
39/23, நெல்சன்
ஒழுங்கை, கொழும்பு 3.

## காயத்ரீ சித்தர் முருகேசு சுவாமி களுக்கு டாக்டர் பட்டம்

புதுடில்லியில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள உலக ஆன்மீக அரசாங்க மகாநாட்டில் நுரலை இலங்காதீஸ்வரர் ஆலய காயத்திரி பீட ஸ்தாபகர் சுவாமி முருகேசு அவர்களுக்கு டாக்டர் பட்டமும் மகா புருஷர் கௌரவப்பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.



இந்த மகாநாட்டில் 171 நாடுகளின் ஆன்மீகர்கள் பங்கு பங்குகின்றனர். சுவாமி முருகேசு இலங்கை ஆன்மீக அரச அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுவாமி முருகேசு அவர்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கையில் இன்று இந்து கலாசாரம் வெளிவரும் இல்லத்தில் சிறுவர் சிறுமியர்களுக்கு சைவ சமய வகுப்பை ஆரம்பித்து வைத்தார். ஜெனிவாவிலிருந்து அப்போது இலங்கை வந்திருந்த சில ஆன்மீகத் தலைவர்களை அழைத்து வந்து மாணவர்களுக்கு சமயப் புத்தகங்களை விநியோகித்தார். சுவாமிகளுக்கு அளிக்கப்பட்ட இக் கௌரவத்தை இந்து கலாசாரம் பெரிதும் பாராட்டுகிறது. காயத்ரீ சித்தர் வாழ்க!

---

(14ம் பக்க தொடர்ச்சி)

நிறைவேற்றிய செயல்கள் யாவையும் குறைபாடாகவே மதிப்பிட்டுக் கொண்டால் எப்படித்தான் ஒருவன் தன்னை உயர் நிலைக்குக் கொண்டு செல்லப் போதிய ஊக்கம் பெறுவாய்? தன் முன்னோர்களையும், பண்பாட்டைப் போற்றி வளர்த்த பெரியோர்களையும், கல்வி ஆசிரியர்களையும் தன் நினைவில் கொள்வதில் பராதியன் வெட்கப்பட வேண்டியதில்லை.

அதற்குப்பதிலாக அவன் தன் முன்னோர்களைப் பற்றியும், அவர்களிடையே பிரக்கியாதி பெற்று விளங்கிய பெரியோர்களைப் பற்றியும், கல்வி ஆசிரியர்களைப் பற்றியும் பெருமிதம் கொள்ள வேண்டும். தன் மூதாதையர்கள் அவ்வாறான பெருமையோடு மேம்பட உரைக்கக் கூடியவர்களாக விளங்கியவர்கள் என்பதைப்பற்றியும், தன் தாய்நாடு விழுமிய குணங்களைப் பெற்ற நாடு, புனிதமான நாடு என்பதைப்பற்றியும் தற்பெருமை கொள்ளும் தன்னறிவு பெறவேண்டும். தம் தாய் நாட்டில் கூரறிவுடன் விளங்கிய முன்னோர்கள் பிறந்து வளர்ந்து, 'ஆன்மீகத் துறையில் உன்னத நிலையை எய்தியுள்ளனர், தன்னிறைவுடன் வாழ்ந்துதுள்ளனர் என்பதை எண்ணிப் பாரத புத்திரர்கள் பெருமை கொள்ள வேண்டும்.

தன் முயற்சியால் வெளியுறும் ஆன்ம சக்தியை வெளிப்படையாக விளக்குங்கள்! பிறரைப் பின்பற்றும் போலி நடத்தை மெலிந்த சூழ்ச்சி முறையாகும். அதைக் கையாளுவது தகாத செயலாகும். அதற்குப் பதிலாகப் பிறரிடம், காணும் நற்குணங்களை ஏற்று நடவுங்கள். பூமியில் விதையொன்றை நடுகின்றோம். பிறகு அதற்குவேண்டிய நீர், காற்று, உரம் இவைகளை அளிக்கின்றோம். விதைமுளைக்கின்றது; இளஞ்செடியாகின்றது; இறுதியில் பிரம்மாண்டமான மரமாகின்றது. நீங்கள் பார்க்களாம், அது நிலமாவதில்லை, உரமாவதில்லை, காற்றாவதில்லை, நீராவதில்லை. அப் பொருள்களை அது உபயோகப்படுத்திக் கொள்கின்றது; ஆனால் அது தன்னியல்பை இழப்பதில்லை தன்னியல்பை யொட்டியே மரமாக வளர்கின்றது.

நீங்களும் அம்மரத்தைப் போன்று வாழ்வீர்களாக. பிறரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உண்டு என்பது உண்மையே. இவ்வுண்மையைப் பற்றிச் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அவ்வாறு பிறரைக் கண்டு கற்க மறுக்கும் நபர்கள் தங்களை அறிவிலிகளென்று விளம்பரிப்பவர்களாவார்கள். உன் ஆன்மீக வாழ்வின் முன்னேற்றத்திற்கு வேண்டிய தெதுவாயினும் சரி, பிறரிடமிருந்து அதைக் கற்கலாம். உன்னுடைய தர்மத்திற்கேற்றபடி, உன் நல்வாழ்விற்குகந்தபடி, நீ நாடும் நல்லொழுக்கத்திற்குத் தகுந்தபடி அவைகள் யாவையும் முழுமையாக ஏற்றுக்கொள். ஆனால் நீ' நீ' யாக வாழ வேண்டுமே யொழிய பிறனொருவனாக வாழக் கூடாது. உன் இயல்பாயமைந்துள்ள இயற்கையை இழக்காதே. அதினின்று பிரிய பிறருக்கு அனுமதி யளிக்காதே. உன் கடவுளினுள் நினைத்திரு. உன் கற்பனைகளிலும், கருத்

(தொடரும்)

---

# தைப்பிறப்பு

பரிதவிக்கும் பாமரர் துயர்துடைக்க—பண்புடை
பழங்குடி திராவிடர் வினைதீர்க்க
பசித்திடுவோர் புசித்திட எங்கும் பசுமைஎய்த
பரிவாரமுடன் வாராயோ தையே—நீ

நம்மவர் நடைப்பிணமாய் நாடெல்லாம் நகன்றிட
நல்வாழ்வின்றி நாளெலாம் நாடோடியாய்
நமதுயிரோ நாநிலத்து நடுத்தெரு வாகிட—நாட்டின்
நலம்பேண வாராயோ தையே—நீ

உற்றாரொருபுறம் உறவினர்மறுபுறம் கற்றார்கடல் கடக்க
உறங்கவுமிடமில்லா உண்ணவும் பணமில்லா
உள்ளத்திலும் சாந்தியில்லா எம்மக்கள்—வருநாளில்
உவகையுடனுய்ய வாராயோ தையே—நீ

காணிநிலம் பெருக்கியெங்கு மருங்கல்வி கரைபுரள
காலம்மாறி கலியுகந்தோன்றி களிப்புடன்வாழ
காவியம் போற்றுமெம் கலாசாரம் கானகத்தியாய் ஒங்க
காலமெலாம் வளம்காண வாராயோ!

—நாகன் ஹரிதாஸ்

அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும்
பராபரமே!

★

இந்துகலாசாரமே சேவையே
உனது முழு மூச்சாக
விளங்குக !

★

அ ன் ப ளி ப் பு

**ஆர். வி.**

இப்பத்திரிகை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/23, இல்லத்தில் வசிக்கும் ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு கிராண்ட்பாஸ் வீதி, 213ம் இலக்கத்திலுள்ள ஸ்டார்லைன் அச்சகத்தில் 1. 1. 89ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.